மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.02/2021
அ.வ.எண்.69/2021

கண்ணையன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. சகுந்தலா
2. கலையரசி
3. ரகுபதி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 18.07.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சுவாமிநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதி சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : -

(i) வாதி/மனுதாரரால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா 'அ' அயிட்டச் சொத்து 19.03.1980 ம் தேதியிலும், தாவா 'ஆ' அயிட்டச் சொத்து 21.04.1980 ம் தேதியிலும், மனுதாரரின் தாயார் பொன்னாயம்மாவிற்கு, 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து கிரயம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும்.

(ii) இந்நிலையில், மனுதாரரின் தாயாரிடமிருந்து, மனுதாரர் தாவா 1-வது அயிட்ட சொத்தை 19.11.1999 ம் தேதியில் தானசெட்டில்மெண்ட் மூலம் பெற்றும், 2-வது

அயிட்டச் சொத்தையும் சேர்த்து அனுபவித்து வருகிறார். தாவா சொத்துக்கள் மனைநிலமும் தடவழியும் ஆகும். தாவா 1–வது அயிட்ட சொத்தில் மனுதாரரின் வீடு உள்ளது. தாவா 2–வது அயிட்டச் சொத்து மனுதாரரின் வீட்டிற்கு செல்லும் தடவழிப்பாதையாகும்.

(iii) மனுதாரர் தாவா சொத்தில் உள்ள பழைய ஓட்டு வீட்டை இடித்துவிட்டு மெத்தை வீடு கட்டி குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், மனுதாரரிடம் கடந்த ஓராண்டு காலமாக, 1ம் எதிர்மனுதாரரும் மற்ற எதிர்மனுதாரர்களும் சேர்ந்து அவர்களுக்கே விலைக்கு கொடுக்கும்படி கேட்டதற்கு, மனுதாரர் மறுத்துவிட்டார். இதனால் எதிர்மனுதாரர் எப்படியாவது தாவா சொத்தை விலைக்கு வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா சொத்துக்களில் மனுதாரரின் சுவாதீனத்திலும், தடவழி பாத்தியத்திலும் இடையூறுகள் செய்து வந்தனர்.

(iv) மேலும் எதிர்மனுதாரர்கள், மனுதாரரையும், அவரது குடும்பத்தாரையும் தகாத வார்த்தைகளால் திட்டியும், வேண்டுமென்றே 2–வது அயிட்ட தாவாச் சொத்தின் தடவழியை அடிக்கடி ஏதாவது பொருள்களை வைத்தும் கட்டில், வண்டி போன்றவைகளை வைத்தும் அடிக்கடி இடைஞ்சல்கள் செய்து வந்தனர். இறுதியாக 31.03.2021ம் தேதி எதிர்மனுதாரர்கள் ஆட்களுடன் வந்து தாவா சொத்திற்குள் நுழைந்து தாவாச் சொத்தை விலைக்கு கொடுக்கும்படி மனுதாரரை மிரட்டினார்கள். மேற்படி தேதியிலேயே பஞ்சாயத்து வைத்து எதிர்மனுதாரர்களை அழைத்து தாவா சொத்தில் மனுதாரரின் சுவாதீனத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என கேட்டார்.

(v) மேலும் எதிர்மனுதாரர்கள், தாவா சொத்து அவர்களுடையது என்றும், அவர்கள் தான் மனுதாரரின் தாயாருக்கு விலைக்கு கொடுத்த சொத்தை அவர்களுக்கே வேண்டும் என்றும், இல்லை என்றால், தாவா சொத்தில் மனுதாரரை குடியிருக்கவே விடமாட்டோம் என்று சூளுரைத்து சென்றனர். தாவா சொத்துக்களை 40 வருடங்களுக்கு முன்பே மனுதாரரின் தாயார், 1ம் எதிர்மனுதாரரிடம் விலைக்கு வாங்கி அதில் மனுதாரர் மெத்தை வீடுகட்டி அனுபவித்து குடும்பத்துடன் வசித்து வந்த

நிலையில், எதிர்மனுதாரர்கள் அராஜகமாக ஆட்களுடன் வந்து மனுதாரரை மிரட்டி தாவா சொத்தை விலைக்கு கேட்டு இடைஞ்சல்கள் செய்து வந்ததால், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 3 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பதிலுரை:</u>

<u>(குறிப்பாணையின் பேரில் இப்பதிலுரையை இம்மனுவின் எதிர்மனுதாரர்களால் எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. கடந்த 19.03.1980 ம் தேதியில் மனுதாரரின் தாயார் பழனியம்மாளிடம் கிரயம் பெற்றதும், 21.04.1980 ம் தேதியில் எதிர்மனுதாரர்களிடம் கிரயம் பெற்றதும் உண்மை. 19.11.1999 ம் தேதியில் மனுதாரர் அவர் தாயாரிடம் 1ம் அயிட்ட சொத்தை தானசெட்டில்மெண்ட் பெற்று 2-வது அயிட்ட சொத்துடன் சேர்த்து அனுபவித்து வருவதாக கூறியுள்ள சங்கதியை மனுதாரர் நிருபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

(ii) மேலும் தடவழி, ஈஸ்ட்மெண்ட் பாத்தியங்களை மறைத்து, தாவா தாக்கல் செய்து எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பரிகாரம் கோர மனுதாரருக்கு எவ்வித உரிமை இல்லை எனவும், தாவா "ஆ" அயிட்ட சொத்தில் 0.3/4 செண்ட் பொதுநிலம் என்று கிரயப்பத்திரத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நிலையில் 3/4 செண்ட் பொது நிலத்தை எதிர்மனுதாரர்கள் பயன்படுத்தக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தின் பேரில் மனுதாரர் உண்மை சங்கதிகளை மறைத்து இந்த தாவா தாக்கல் செய்துள்ளார்.

(iii) மேலும் எதிர்மனுதாரர்களின் குடும்பங்கள் 50 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகின்றனர். மேலும் மனுதாரர் கந்து வட்டி லேவாதேவி தொழில் சட்டத்துக்குப் புறம்பாக செய்து வருகிறார். அதனால் காவல்துறையில் அவருக்கு உதவி செய்ய ஆட்களும், அடியாட்களும் உண்டு. மனுதாரர், பிரதிவாதிகள் சொத்தை அபகரிக்கும் நோக்கில் கடந்த 11.02.2015 ல் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் சுற்றுச்சுவர்

எழுப்ப முயற்சித்ததை, காவல்நிலையத்தில் புகார் செய்யப்பட்டு சர்வேயரை வைத்து ஊர் பெரியவர்கள் முன்னிலையில் அளவு செய்து சுற்றுச்சுவர் அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஊர்பெரியவர்கள் மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் சுப்ரமணி, குணசேகரன், K.C. பாரதி ஆகியோர் முன்னிலையில் அளவீடு செய்யப்பட்டு 2–வது தாக்கு பத்திரத்தில் உள்ளது போல் கிழமேல் இருபுறம் 63 லிங்ஸ் தென்வடல் இருபுறம் 5 லிங்ஸ் இந்த அளவுள்ள 315 சதுர லிங்ஸ் நிலம் மனுதாரருக்கு ஒதுக்கிவிட்டு 2 அடி விட்டு பிரதிவாதிகள் சுற்றுச்சுவர் எழுப்பி அனுபவித்து வருகிறார்கள்.

(iv) இதனால் மனுதாரர் 2015ம் ஆண்டு முதல், எதிர்மனுதாரர்கள் மீது பகைமை கொண்டு, இடையூறு செய்து வருகிறார் எனவும், கடந்த 20.03.2021ம் தேதியில் எதிர்மனுதாரர்கள் வீட்டில் வசிக்கும் அமுதா என்பவரை மிரட்டி, பொய் புகார் கொடுத்து பொது தடத்தில் நடக்ககூடாது என இடையூறு செய்து வந்தார். மேலும் 25.03.2021ம் தேதியில் காவல் ஆய்வாளர் நிலஅபகரிப்பு பிரிவு சேலத்தில், மனுதாரர் பேரில் புகார் கொடுத்து விசாரித்தபோது, கோர்ட்டில் பார்த்துக் கொள்கிறேன் என்று எழுதி கொடுத்து விட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டு, மீண்டும் 13.08.2021ம் தேதியில் மனுதாரரின் மனைவியின் தாலி செயினை, அமுதா அறுத்துவிட்டார் எனவும், விபச்சாரம் செய்கிறார் எனவும் பொய் புகார் கொடுத்து, அதனை விசாரித்த காவல்துறையினர் பொய் புகார் என தெரிந்து மனுதாரரை விரட்டி விட்டனர்.

(v) இந்நிலையில், 1980ம் ஆண்டில் கிரயம் விற்ற எதிர்மனுதாரர்கள், மனுதாரரின் வீட்டையும், தாவா சொத்தையும் அவர்களுக்கே விற்க வேண்டுமென கேட்டதற்கு மனுதாரர் மறுத்து வந்துள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துக்களில், மனுதாரரின் சுவாதீனத்தை இடையூறு செய்ததாகவும், கற்பனையான சங்கதிகளுடன் இந்த வழக்கை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

(vi) மேற்படி பொது தடம் தவிர எதிர்மனுதாரர்கள் வெளியே வர வேறு வழியில்லை. இந்நிலையில் பொருட்களை வைத்து தடுத்ததாக சொல்லியிருப்பது தவறு. அதேபோல் 31.03.2021ம் தேதி எந்தவொரு பஞ்சாயத்தும் நடக்கவில்லை. மேலும் விளம்புகை

பரிகாரம் கோராமல் கூட்டுரிமைதாரர்களுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோர மனுதாரருக்கு உரிமை இல்லை எனவும், தாவா "ஆ" அயிட்ட சொத்து விவரத்தில் 3/4 செண்ட் பொது நிலம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் பொய்யானதாகும். வழக்குமூலம் பொய்யானது. எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் தாவா சொத்துகளானது 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரரின் தாயார் பொன்னாயம்மாள் கிரயம் பெற்று அனுபவித்து வந்ததாகவும், மேற்படி மனுதாரரின் தாயார் தாவா சொத்துகளை மனுதாரருக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் அளித்துவிட்டதாகவும், அதன் சுவாதீன அனுபவத்தில் மனுதாரரே இருந்து வருகிறார் என்றும், இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் மற்ற எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து கொண்டு தாவா சொத்தை தங்களுக்கே மீண்டும் விலைக்கு கொடுக்க வேண்டும் என கேட்டதை மனுதாரர் மறுக்கவே மனுதாரர் மீது விரோதம் கொண்டு தாவா சொத்துகளை அடையும் கெட்ட எண்ணத்தில் தாவா சொத்துக்களில் மனுதாரரின் சுவாதீனத்திலும், தடவழி பாத்தியத்திலும் இடையூறுகள் செய்வதால், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தடவழி, ஈஸ்ட்மெண்ட் பாத்தியங்களை மறைத்து, தாவா தாக்கல் செய்து எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பரிகாரம் கோர மனுதாரருக்கு எவ்வித உரிமை இல்லை எனவும், தாவா "ஆ" அயிட்ட சொத்தில் 0.3/4 செண்ட் பொதுநிலம் என்று கிரயப்பத்திரத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது எனவும், இந்நிலையில் 3/4 செண்ட் பொது நிலத்தை எதிர்மனுதாரர்கள் பயன்படுத்தக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தின் பேரில் மனுதாரர் உண்மை சங்கதிகளை மறைத்து இந்த தாவா தாக்கல் செய்துள்ளார் எனவும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி பொது தடம் தவிர எதிர்மனுதாரர்கள் வெளியே வர வேறு வழியில்லை எனவும், இந்நிலையில் பொருட்களை வைத்து தடுத்ததாக சொல்லியிருப்பது தவறு எனவும், மேலும் விளம்புகை பரிகாரம் கோராமல் கூட்டுரிமைதாரர்களுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோர மனுதாரருக்கு உரிமை இல்லை எனவும், தாவா "ஆ" அயிட்ட சொத்து விவரத்தில் 3/4 செண்ட் பொது நிலம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் பொய்யானது எனவும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தாவா சொத்துகளிலுள்ள மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்யக்கூடாது என வாதி/மனுதாரரால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தங்களுக்குள்ள தடவழி, ஈஸ்ட்மெண்ட் பாத்தியங்களை மறைத்து மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா "ஆ" அயிட்ட சொத்து பொதுநிலம் என்றும், அதை எதிர்மனுதாரர்கள் பயன்படுத்தக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தின் பேரில் மனுதாரர் உண்மை சங்கதிகளை மறைத்து இந்த தாவா தாக்கல் செய்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(v) இச்சூழ்நிலையில் மனுதாரர் தாவாவில் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரத்தையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரரால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது தாவா சொத்தின் சட்டப்படியான சுவாதீன அனுபவத்தில் மனுதாரர் உள்ளாரா? என்பதும், தாவா சொத்திலுள்ள மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தார்களா? என்பதும், எதிர்மனுதாரர்கள் கூறுவது போல் "ஆ" அட்டவணை சொத்தானது பொதுச்சொத்தா? என்பதும், மேற்படி "ஆ" அட்டவணை சொத்தில் எதிர்மனுதாரர்களுக்கு வசதியுரிமை உள்ளதா? என்பதுமே ஆகும்.

(vii) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சட்டம் மற்றும் சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.07.26 16:09:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :- இல்லை</u>

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 19.03.1980 | கிரயப்பத்திரம் | அசல் |
| ம.சா.ஆ.2 | 21.04.1980 | சுத்தக்கிரயப் பத்திரம் | அசல் |
| ம.சா.ஆ.3 | 19.11.1999 | தானசெட்டில்மெண்ட் ஆவணம் | அசல் |
| ம.சா.ஆ.4 | 03.03.2021 | மனுதாரர் பெயரிலுள்ள சொத்து வரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.5 | 29.03.2021 | சொத்து தொடர்பான வில்லங்க சான்று | கணிணிநகல் |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு மற்றும் சான்றாவணங்கள்:

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 18.05.1964 | வீடு கட்டும் காலி நிலக்கிரயப்பத்திரம் | அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 12.05.1971 | வீட்டுக்கிரயப் பத்திரம் | அசல் |
| எ.ம.சா.ஆ.3 | 12.05.1971 | கிரயப்பத்திரம் | பதிவு நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 19.03.1980 | கிரயப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 21.04.1980 | கிரயப்பத்திரம் | பதிவு நகல் |
| எ.ம.சா.ஆ.6 | 19.11.1999 | தானசெட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.7 | 12.04.2021 | பட்டா எண்.256 | வளைதள நகல் |
| எ.ம.சா.ஆ.8 | 23.12.2022 | குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| எ.ம.சா.ஆ.9 | 15.11.2022 | சொத்து வரி ரசீது | அசல் |

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2023.07.26 16:09:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.